# ஞான ஒளி

## மணி விழா மலர்



திருமதி ஞானசோதி பத்மநாதன்
Primary (Trd)
SLTS - 1

வெளியீடு
கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்
2020.10.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான ஒளி

## மணி விழா மலர்

திருமதி ஞானசோதி பத்மநாதன்
Primary (Trd)
SLTS - 1

வெளியீடு
கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்
2020.10.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய**
**வகுதித் தலைவர், பிரதி அதிபர்**
**திருமதி ப.ஞானசோதி அவர்களின்**
**மணி விழாவிற்கு விழாக்குழு**

தலைவர்
**திரு சி.கேதீஸ்வரன்**
(அதிபர்)

**மலர்க்குழு**
செல்வி சி.கவிப்பிரியா
திருமதி ய.சசிபாபு
திருமதி கி.அரியதாசன்
திருமதி இ.அனுசியா
திருமதி ய.சுதாஸ்கரன்
திருமதி க.லலிதா

**மணிவிழா செயற்குழு**
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பணியாளர்கள், பழைய மாணவர்கள்,
பெற்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

இராகம் : மாண்டு தாளம் : ஆதி

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்ததனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீக்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்கதமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்க என்றும் வளமுடன் எங்கள் வித்தியாலயம்
வான்புகழ் ஓங்கியே வாழ்க வாழ்கவே
வான்புகழ் ஓங்கியே வாழ்க வாழ்கவே

(வாழ்க)

மத்திய ஆரம்ப வித்தியாலயம்
மாணவர் நலன் ஓம்பும் வித்தியாலயம்
தேர்ச்சி நிறை கல்வியினைத் தினமும் வழங்கியே
தேசத்தின் பிள்ளைகளை வளர்க்கும் ஆலயம்

(வாழ்க)

அன்பும் அறிவும் நிறைந்த அதிபர் ஆசிரியர் அரவணைப்பில்
ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் பயின்றிடுவோம்
வல்லவராய் நல்லவராய் வாழ வைக்கும் அன்னையின்
தாழ் பணிந்து தனித்துவமாய் உயர்ந்திடுவோமே

(வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- ஆசிச்செய்தி
- வாழ்த்துச் செய்திகள்

    **திரு சி.கேதீஸ்வரன்**
    (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்பவித்தியாலய அதிபர்)
    **திரு சு.தர்மரத்தினம்**
    (கோட்டக்கல்விப் பணிப்பாளர், கரைச்சி)
    **திரு மா.தேவேந்திரன்**
    (வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
    **எல் மாலினி வெனிற்றன்**
    முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர், துணுக்காய்
    **திரு அ.இரவீந்திரன்**
    (உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி), வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.)
    **திரு பொ.விஜயநாதன்**
    (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி), வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.)
    **திரு பா.ஶ்ரீஸ்குமார்**
    (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி), வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.)
    **திரு க.வைரமுத்து**
    (முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.)
    **திரு சி.பங்கையற்செல்வன்**
    (கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு நிலை), ஒட்டுசுட்டான்)
    **வைத்திய கலாநிதி மு.சிறீதர்**
    (மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி)
    **திருமதி கௌரிபுத்திரி கிருபாகரன்**
    (உதவிக் கல்விப் பணிப்பாளர் தமிழ் (முன்னாள்) துணுக்காய் வலயம்)

- மணிவிழா நாயகி திருமதி ஞானசோதி பத்மநாதனின் ஞானஒளி... சுவடு
- வாழ்வும் பணியும்
- சக ஆசிரியர்களின் உள்ளத்தில் இருந்து...
- சேவை நலன் பாராட்டு வாழ்த்து மடல்
- உளம் நிறைந்த நன்றிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் வகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் தன் கடமைகளைச் செய்து வந்த திருமதி ஞானசோதி பத்மநாதன் அவர்கள் புன்னகையும், சுறுசுறுப்பும், இன் சொல்லும் கொண்டவராக எல்லோர் இதயங்களையும் ஈர்த்தெடுத்த நாயகிக்கு அகவை அறுபது நிறைவில் மணிவிழா என்பது வயதுக்கு வழங்கும் நிகழ்வன்று அவர் செய்த பணிக்குச் செய்யும் பாராட்டாகும் அவர் பல பாடசாலைகளிலும், துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்திலும் பணியாற்றியமையைப் பாராட்டி **ஞான ஒளி** என்னும் மணிவிழா மலரை வெளியிடுவதில் மலர்க்குழு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

இவர் எமது வித்தியாலயத்தில் 09.02.2015 இல் கடமை பொறுப் பேற்றுபணியாற்றிய காலத்தில் நிர்வாகம்சார் விடையங்களில் மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தவர் இவர் ஓய்வுக் காலம் சிறக்க இந்த மலர் இதழ்கள் மணம் திறந்து வாழ்த்தட்டும் வாழ்க.

**மலர்க்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

*உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்* குறள் - 394

பலரும் மகிழுமாறு அவர்களுடன் கூடிப்பழகி பின்னர் இவரை இனி எப்போதும் காண்போமோ? என்று அவர்கள் எண்ணி ஏங்குமாறு அவர்களை விட்டுப் பிரிதலே கற்றறிந்த புலவர் தொழிலாகும்.

மதிப்பிற்குரிய ஆசிரியர் பத்மநாதன் ஞானசோதி அவர்கள் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் அவருடைய கலவிச்சேவையில் மாணவர்களோடு அன்பாக கற்பித்தலில் பழகிய காலங்கள் ஒவ்வொன்றும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை அவருடைய அன்பும், பண்பும், ஆற்றலும் நிறைந்த அவர்களது சேவை அளப்பரியது. மாணவ சமுதாயத்தின் ஆரம்பக் கல்விதனை மாணவர்களுக்கு கற்பித்துக் கொடுக்கும் சேவையின் மூலம் உயர்ந்த பதவியை அடைந்த சேவைக்காலத்தை பூர்த்தி செய்யும் இந்நாளில் எமது நல்வாழ்த்துக்களும் நல் ஆசிகளும் இறைவனின் திருவருளும் பெற்று நல்லவண்ணம் வாழ வேண்டும் என்றும், ஓய்வுக்காலத்திலும் பல மாணவர்களை நற்பிரசையாக எமது நாட்டுக்கு நல்குவீர் என ஆசிச்செய்தியினை வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

சுபமஸ்து

நன்றி

**சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீ காந்தக்குருக்கள்**
**ஜெயதுர்க்கை அம்மன் ஆலயம்**
**ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் வாழ்த்துச் செய்தி

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க எமது வித்தியாலயத்தின் பகுதித்தலைவராகிய திருமதி ஞானசோதி பத்மநாதன் அவர்கள் புன்னகையுடனும் சுறு சுறுப்புடனும் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் மிகவும் வல்லவர் எனது விடுப்பு (லீவு) நாட்களின் பதிற் கடமையை சரியாகச் செய்து முடிப்பவர். இவர் 1988 இலிருந்து 2020 வரையான முப்பத்திரெண்டு (32) வருடங்கள் கல்விக்காக ஆசிரியராக, வகுதித்தலைவராக, ஆசிரிய ஆலோசகராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக அரும்பணியாற்றி அகவை அறுவது முடித்து மணிவிழாக்காணுகின்றார். இவரின் ஓய்வுக் காலம் சிறக்கவும், அவர் நீண்ட காலம் தனது குடும்பத்துடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று வளமோடு வாழவும் உளமார வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.கேதீஸ்வரன்**
**அதிபர்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரைச்சிக் கோட்டக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தேர்ச்சி பெற்ற ஒரு ஆரம்பக்கல்வியின் வித்தகர் திருமதி ஞானசோதி பத்மநாதன் அவர்களின் ஓய்வு கல்வித்துறையின் நீண்ட பாரிய வெற்றிடமாகும். மருத்துவத்துறையிலும் ஏனைய துறைகளிலும் அவர்களின் வயது அனுபவம் மேலும் தேர்ச்சியை வளர்த்துச் செல்ல கல்வித்துறையில் அத் தேர்ச்சி முடக்கப்படுகின்றது. இவர் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தொண்டராசிரியராக 4 ஆண்டுகள் கடமையாற்றி போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கிளி/கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்தில் முதல் நியமனத்தை பெற்று கிளி/இராமநாதபுரம் கிழக்கு, கிளி/பாரதி வித்தியாலயம் பாடசாலைகளில் கடமையாற்றி துணுக்காய் கல்விவலயத்தில் ஆசிரிய ஆலோசகராகவும் உதவிக்கல்விப்பாளராகவும் பல ஆண்டுகள் பணியாற்றி மீண்டும் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் கடமைபுரிந்து ஓய்வு பெறுகின்றார்.

இவர் கல்விப்புலத்தில் பல அதிபர்களுக்கு கீழேயும் பல கல்விப் பணிப்பாளர்கள் கல்வி அதிகாரிகளுக்கு கீழேயும் பல்வேறுபட்ட மத்திய கல்வி அமைச்சின் பணிப்பாளர்களுடனும் இணைந்து பணிபுரிந்து மிகவும் அமைதியான மதிநுட்பம் மிக்க ஆசிரியராக பணிபுரிந்து பாராட்டுக்களையும் நன்மதிப்பையும் பெற்ற ஒருவராவார். இன்று கல்வித்துறையில் பலர் பதவியையும் கதிரைகளுக்குமாக போட்டி போடுகின்ற இக்காலத்தில் கதிரைகளையும், பதவிகளையும், அலங்கரிக்காது மனிதநேயத்தையும், சேவையையும் முன்னிறுத்தி பணிபுரிந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி ஆசிரியருக்கு அதிபர் பதவியும் கிடைக்கவிருந்து தவறியமையும் உதவிக்கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்து பின் ஒரு ஆசிரியராக பணிபுரிவதில் எந்த சலனமும் இல்லாது பணியாற்றி மிக சந்தோசமாக பணிபுரிந்து ஒய்வு பெறுகின்ற நாயகியை ஓய்வுக் காலம் சிறக்கவும் பிற்காலத்தில் ஆன்மீக வழிகளில் ஈடுபட்டு வாழ்க்கைப் பயணம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

ஒரு நல்லாசிரியருக்கு அவர் சேவையைப் பாராட்டி மலர் வெளியிட்டு வாழ்த்தும் பாடசாலை நிர்வாகத்தினரையும் முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர் குழாத்தையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**இங்ஙனம்**
**சு.தர்மரத்தினம்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**கிளிநொச்சி (கரைச்சி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மகாண கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் **வகுதித் தலைவராக** அர்ப்பணிப்புடன் கடமையாற்றி தனது சேவைக்காலத்தில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் நன் மதிப்பினைப் பெற்று இன்று மணிவிழாக்காணும் திருமதி பத்மநாதன் ஞானசோதி அவர்களின் மணிவிழா சிறப்பிதழிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

நல்லாசானாக சிறந்த வகுதித்தலைவராக மட்டுமல்லாமல் பல வருடங்கள் ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார். இவரைப் பல தடவைகள் பரீட்சைக்கடமைக்கு அழைத்துச்சென்றுள்ளேன். அங்கு இவரது செயற்பாட்டின் வேகத்தையும், விவேகத்தையும், கண்டு வியந்து பாராட்டியுள்ளேன். சிறந்த இறைபக்தியுள்ள இவர் தன்னை நாடிவந்த மாணவர்களுக்கும் இறைபக்தியைப்புகட்டி நற்பிரசையாக மாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

எந்தச் செயலாக இருந்தாலும் இலகுவாகவும் புன்னகையுடனும் எதிர்கொள்ளும் ஆளுமை அவரது தனிச்சிறப்பாகும் இத்தகைய சிறப்புடன் இருக்கும் இவருக்கு அறுபது வயது ஆகி விட்டதா? என்பது ஆச்சரியம். திருமதி ப.ஞானசோதி அவர்கள் தனது ஓய்வுக்காலத்திலும் இன்னும் பல சமய சமூகப் பணிகளை மேற்கொண்டு தனது குடும்த்தினருடன் நீண்டகாலம் மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல அம்பாளின் அருளாசி கிடைக்க வேண்டிப் பிரார்த்தித்து எனது பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இவர் ஞானசோதி மட்டுமல்ல ஞாலத்தின் சோதியும் கூட"

**மா.தேவேந்திரன்**
**129, ஆனந்த நகர்,**
**கிளிநொச்சி.**
**0770523105**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

துணுக்காய் கல்வி வலயத்துக்கு நான் வலயக் கல்வி பணிப்பாளராக கடமை ஏற்ற 2011 மார்கழி மாதம் தொடக்கம் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த திருமதி ஞா.பத்மநாதன் அவர்களை அவர் சேவையை நான் நன்கு அறிவேன். துணுக்காய் வலயத்துப் பாடசாலைகளெல்லாம் போக்குவரத்து பிரச்சினைகள் நிறைந்த பிரதேசமாகக் காணப்பட்ட போதும் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் சகல பாடசாலைகளையும் மேற்பார்வை செய்து வழிகாட்டிய ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளர் இவர் மாத்திரமே என்பது என் அனுபவத்தில் நான் கண்ட உண்மை மிகவும் பொறுமையாக செவிமடுக்கவும் ஆலோசனைகளுக்கமைய செயற்படுத்துவதிலும் நேரத்தைக்கூடக் கருதாது செயலாற்றியவர். தனது குடும்பத்தில் பல தேவைகள் இருந்த போதும் தனது வேலை நேரத்துக்கும் மேலதிகமாக துணுக்காய் வலய ஆரம்பக் கல்வி அபிவிருத்தியில் பாடுபட்டு உழைத்தார். குடும்பச் சூழ்நிலை காரணமாக இடமாற்றம் பெற்றுச் சென்றார். இவரது அறுபதாவது வயதில் ஓய்வு பெறும் வேளையில் இவரது சேவையைப்பாராட்டி நிறைந்த உடல் நலத்துடன் வாழ இறைவனை வேண்டி நிற்கிறேன்.

**எல் மாலினி வெனிற்றன்**
**முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்**
**துணுக்காய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமையின் அணிகலன்

**தேசம் புகழும் தொழிலாம் என்றுமே**
வேசம் போடா ஆசான் எங்கள் ஞானசோதி ஆசிரியர்
மணிவிழா நாளினில் - எந்தன்
வயது கடந்த உறவை - வாழ்த்த
வரண்டளவே வார்த்தை - அவர்
கடந்த பாதைப் பணி பலதே

வடக்கின் இதயம் கிளி மத்தியின்
ஆரம்பக்கல்வியை அரவணைத்த
கலைத்தாயில் நீங்கள் ஒருவர்

ஆசானாய் ஆண்டாய் பலவாண்டு - பின்
அரும்பணி செய்தாய் ஆலோசகராய் - தாண்டி
ஆரம்பப் பிரிவின் அடித்தளமாய்
உதவிக் கல்விப் பணிப்பாளராகவும்
உயர்ந்து நின்றீர்

இறுதியில்
பள்ளியின் வகுதித் தலைவராய்
பணி செய்து
உயர்வடைந்தீர் உம்மை
பின் நின்று ஏதும் தடுக்கினும் - அதனை
படிக்கல்லாய் மாற்றி பவனி வந்தீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நும் திறன் ஆளுமை ஆற்றல் என யாவும்
நூல் கற்றும் வருவதில்லை யார்க்கும்
போர் பற்றி தமிழ் புதையும் வேளையிலும்
வேரிலிருந்து கிளர்ந்தெழுந்த உறவே இதை
யார் வந்து இப்பணி செய்தாலும்
சீராகாது சேவை இடைவெளி

அமாவாசை தொடர்நாள் போல் - எந்நாளும்
வளர்ந்து வரும் இளம்பிறையே - நீர்
அரச பணியில் இருந்தே
அறுபதினில் ஓய்வடையும் எம்
விருப்பு ஆசானாய் - நீங்கள்
ஆசிரியராய் ஓவெடுங்கள்
ஆசிரியர் பணியில் ஓய்ந்திடாதீர்கள்

ஒன்றல்ல நீங்கள் பத்தல்ல
ஒன்று பத்து நூறு வருடம்
வசந்தங்களோடு வாழ
வாழ்த்தி வணங்குகின்றேன்

**திரு.அ.ரவீந்திரன்**
**உதவிக்கல்விப்பணிப்பாளர் (ஆ.க)**
**வலயக்கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாண்புடன் மணிவிழா
# காணும் நாயகிக்கு மகிழ்வான வாழ்த்துக்கள்

உயர்வான பணியான கல்விப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டு ஆசிரியர் சேவையிலும், பிரதி அதிபர் சேவையிலும், ஆசிரிய ஆலோசகர் சேவையிலும், உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) சேவையிலும் 32 வருடங்கள் முழுமையாகப் பணியாற்றினார். தன் வாழ்வில் பெரும் காலத்தைக் கல்விப்பயனுக்காகவே பணி செய்து இன்று ஓய்வு பெறும் திருவாட்டி ஞானசோதி பத்மநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

நான் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இவர் எனக்கு நன்கு தெரிந்த ஒரு சிரேஷ்ட ஆசிரியர் இவர் எமது வலயத்தில் 18 வருடங்களும், துணுக்காய் வலயத்தில் 14 ஆண்டுகளும் கல்விப் பணியாற்றினார். இவர் ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றிய போது மிகவும் சிறப்பான வளமான நிபுணத்துவம் மிக்க வளவாளராகச் செயற்படுவார். துணுக்காய் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகர் பணியினை மிகவும் கஸ்ரப் பிரதேசத்தில் தனது உன்னத பணியாக மேற்கொண்டார். அவரின் சிறப்பம்சமாக அவ்வலயத்தில் 5 வருடங்கள் உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) பணியை மிகவும் சிறப்பாக மேற்கொண்டார். இவர் காலத்தில் துணுக்காய் கல்வி வலயத்தில் சிறுவர் போட்டிகள், தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் உன்னதமான பெறுபேறுகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. நேர்மையான சிந்தனையோடு விழுமியம்சார் அறிவூட்டும் பாங்கு இவரின் ஆளுமைக்கு எடுத்துக்காட்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப்புலத்தில் முப்பத்திரெண்டு வருடங்கள் 3 தசாப்தங்களாக கல்வியில், கலையில், விழுமியத்தில், அறநெறியில், ஒழுக்கத்தில் உயர்ந்த மாணாக்கர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் திருமதி ஞானசோதி பத்மநாதன் ஆவார். அவர் வாழும் காலத்தில் போற்றுவது பெருமைக்குரியது அவரது வாழும் காலம் போற்றுதற்குரியது.

பதினான்கு ஆண்டுகள் துணுக்காய் வலயத்தில் கல்விப் பணியாற்றிய அம்மணி தனது ஓய்வுக் காலத்தில் கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் தனது அர்பணிப்பான பணியை ஆற்றி பெரும் மனத் திருப்தியோடு இன்று மணி விழாக் காணுகின்றார். ஒவ்வொரு உள்ளங்களிலும் தன் பணியில் வானுயர உயர்ந்து நிற்கும் இவரது ஓய்வுக்காலம் மகிழ்வானதாகவும், நலமானதாகவும், ஒளிமயமானதாகவும் அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இம் மணி விழா மலரும், மணிவிழாவும் சிறப்புற மனம் மகிழ்ந்து வாழ்க வென்று வாழ்த்துகிறேன்.

**திரு.பொ.விஜயநாதன்**
**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி

ஆரம்பக் கல்வித்துறையில் பல்வேறு பாத்திரங்களில் தனது சேவையை இதய சுத்தியுடன் வழங்கி மணிவிழாக்காணும் திருமதி ஞா.பத்மநாதன் அவர்களுக்கு வாழ்த்து வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். ஆரம்ப உதவிக்கல்விப் பணிப்பாளராக துணுக்காய் கல்வி வலயத்தின் தனது பணியினை பெரு விருட்சமாக வழங்கி அப்பிரதேச மழலைகளின் எதிர்காலத்திற்கு உரமான அடிஅத்திவாரத்தினை இடுவதில் பெரும்பங்கு ஆற்றியுள்ளார்.

தன்னலம் கருதாது எந் நேரமும் ஆரம்பக் கல்விச் சிந்தனையோடு ஏதோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் எண்ணம் கொண்டவர். இவரோடு மகாணகல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படும் பல்வேறு செயலமர்வுகள் ஆரம்பக்கல்வி கலந்துரையாடல் தேசிய கல்வி நிறுவகத்தின் கலைத்திட்ட மாற்ற செயலமர்வுகள் பலவற்றில் நானும் ஒருவனாகக் கலந்து கொண்டு இவருடைய அனுபவங்களை பெற்றவன் என்ற வகையில் பெருமிதம் கொள்கிறேன்.

செயலமர்வுகளில் இவர் காட்டும் துடிப்பான அனுபவப் பகிர்வுகள் எல்லோரையும் வழிநடத்தும் வல்லமை கொண்டவை. கிளிநொச்சி கல்வி வலயத்திலும் இவருடைய பணி மாணவச்சமூகத்தை நெறிப்படுத்தியதுடன் ஆசிரியர்களையும் தனது ஆளுமையால் வழிநடத்தி தலைமைக்கு என்றும் உறுதுணையாக நின்று செயற்படும் வல்லமைத்திறன் கொண்டதாலும் இவருடைய கல்விப்பணியில் வழிவந்த மாணவச் சமூகம் இந்த நாட்டின் எதிர்காலச் சிற்பிகளாகத் திகழ இவர் தன் பணியில் அக மகிழ்ந்து ஓய்வுக்காலத்தில் பல் சீர் சிறப்பு பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றேன்.

**திரு.பா.ஸ்ரீஸ்குமார்**
**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்

தன் பெயருக்கு ஏற்ப
ஞானசோதி எனும் அறிவு ஒளி
செந்தமிழ்ச் சிறார்களோடு சிறுமியாகி
ஏற்றிய ஞானதீபம் பரந்து, அன்பு ஒளியாகி
கல்விக் கடலில் மிதக்கும் ஆசான்களுக்கும்
ஓர் ஆசானாகி கலங்கரை ஒளியாகி
விளங்கிய இவர் பணி ஓய்வு நிலையிலும்
தொடர் ஒளியாகி வாழ்வு ஒளி பெருக்கி
என்றும் வளமுடன் வாழ்க வாழ்கவென
வாழ்த்தும் இத் தொன் தமிழுலகு

**கந்தையா வைரமுத்து**
**முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செயல்களாலும் பண்பினாலும் பணிவினாலும் தன்னை வளர்த்தவர் ஞானசோதி (அறிவு +ஒளி)

கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்பவித்தியாலயத்திலே வகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றும் திருமதி ஞானசோதி பத்மநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு நற்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

மாணவியாக மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் பொழுது மாணவர் தலைவியாகவும் மன்றங்களைக் கொண்டு நடத்தக் கூடிய தலைவியாகவும் கவிதை எழுதும் ஆற்றலுள்ளவராகவும் ஒரு துடிப்பான மாணவியாகத் திகழ்ந்தார்.

ஆசிரியரான பின்பு தனது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தில் முதல் பற்றுச்சீட்டைப் பெறவேண்டும் என்ற ஆர்வத்தில் அவர் பெற்றுக்கொண்டது அவரது பற்றுறுதியை எடுத்துக்காட்டியது. இவர் ஆசிரிய ஆலோசகராக மீண்டும் துணுக்காய் கோட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பதினேழு பாடசாலைகளை மேற்பார்வை செய்ததோடு மாந்தை கிழக்குக் கோட்டத்திலும், ஒட்டுசுட்டான் கோட்டத்திலும், தனது சேவையை நிலைநாட்டினார்.

நாங்கள் எல்லோரும் வலயக்கல்வி அலுவலகத்தில் இணைந்து பல கடமைகளை நிறைவேற்றினோம். போட்டிகளை நடாத்தும் போது நேர்மை நடுவுநிலைமை பார்ப்பதில் இவருக்கு நிகர் எவரும் இல்லை எனலாம். உதவிக்கல்விப்பணிப்பாளராக மூன்று கோட்டங்களிலும் தனது சேவையை ஓடி ஓடிச் செய்து தனது உறவுகளுடன் கிளிநொச்சி நோக்கிச் சென்றாலும் அவரது சேவை தேவை எந்தநாளும் தொடரும்

**திரு.சி.பங்கையற்செல்வன்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**ஒட்டுசுட்டான் துணுக்காய் வலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஆசிரியராகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரிய ஆலோசகராகவும், உதவிக் கல்வி (ஆரம்பக்கல்வி) பணிப்பாளராகவும் கடமையாற்றி இறுதியாக கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் வகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெறும் திருமதி ஞானசோதி பத்மநாதன் ஆசிரியரின் இன்று வரையான சேவை பாராட்டுக்குரியதாகும்.

திருமதி ஞானசோதி பத்மநாதன் ஆசிரியர் தனது சேவைக் காலத்தில் மாணவர்களிடத்தில் அன்பாகவும், பண்பாகவும் பழகி மாணவர்களுக்கு கல்வியுடன் கூடிய நல்லொழுக்கத்தையும் புகட்டிய நல்லாசான். இவருடைய சரியான திட்டமிடல் , விடாமுயற்சி, கடின உழைப்பு என்பன அவரையும் அவரது குடும்பத்தினரையும் உயர் நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.
இவரின் நற்பணிகள் தொடரட்டும் வாழ்த்துகின்றேன்.

**மு.சிறீதர் (M.B.B.S)**
**மருத்துவர்**
**கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கவிதை**

**சேவையின் சிறப்புச் சொல்லி...**

திருமதி ஞானசோதி பத்மநாதன்
முன்னாள் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்
பணிப்பாளர் - துணுக்காய் வலயம்

அகன்ற அகிலத்தில் அகலக் கண் திறந்து
அறிவுச் சுடர் ஏற்றிய ஞானசோதி
அரும்பான கல்வியை கரும்பாக
இனிக்கச் செய்தார்

அழகான ஒரு சோடிக் கண்கள் அவை
அம்புகள் பாய்ச்சி என் உளமெல்லாம் புண்கள்
மலை வாழை அல்லவோ கல்வி
வாயார உண்டு திரும்பிடும் மழலைகள்

கசடறக் கற்கும் கல்விக்காய்
ஆசானாய் கற்பித்தார் கல்விக்கூடமதில்
ஞானசோதி எனும் பெயரோடு
ஞாலத்தில் உதவினார் ஒளியோடு

சொன்னபடி நடவாத துடிப்பயல்களை
சொற்கேட்கும் பிள்ளைகளாக்கினார்
விநாயகபுரத்திலே விதைத்த பயிர்கள் பல
அறிவுக் கதிர்களாக எழுந்து நிற்கின்றன

அந்தக் காலம் அப்படி இருக்கையிலே
ஆசிரிய ஆலோசகர் நற்பணி தொடர்ந்தார்
காடென்ன மலையென்ன
கல்லென்ன முள்ளென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை துயர் கடந்தும்
எத்தனை சேவை செய்தார்
அத்தனைக்கும் காட்சிகள்
அவர் தம் மகவுகள்

காலங்கள் கடந்ததும் கனவுகள் கனிந்தது
கால வெள்ளம் எம்மைக் கதிகலங்க வைத்தது
ஓடினோம், ஓடினோம் கால்கடுக்க ஓடினோம்
ஆயின் ஞானசோதி அறிவொளியை வீசியது

சேவையின் தேவை உணர்ந்து
ஆரம்பக் கல்வியின் உதவிக்கல்விப்பணிப்பாளரானார்
எத்தனை பாடசாலை தரிசிப்புக்கள்
எத்துணை செயலமர்வுகள் செப்பல்கள்

போட்டிகளை நடாத்துகையில் புள்ளி மான் கன்றானார்
ஈட்டி பாய்ந்தது போல்
துணுக்காய் கல்வி வலயப் பெருமை காத்து நின்றார்
பட்டி தொட்டியெல்லாம் அம்மா உன் புகழ் கூறும்

தூசியின்றித் தெளிந்தோடும் துறை போல
பாசி இன்றி கீழ் இறங்கும் நீர் வீழ்ச்சி போல
வீசி வந்து வலயப் பாடசாலை தோறும்
மூசி பணிபுரிந்தார் விவேகமாய்

நற் துணைவன் பத்மநாதன்
பக்கபலமாய் இருந்து விட
அல்லை தொல்லை அற்ற பிள்ளைகள்
நல்லவராய் அம்மா கரம் கோர்க்க
தொடர்ந்த நற்பணியது ஆசானாய் திரும்பி
ஒக்டோபர் மாதமதில் மணிவிழா காணுகின்றார்

சேவை நின்றிடிலும்
சேர்வோம் அன்பெனும் தோட்டமதில்

**திருமதி கௌரிபுத்திரி கிருபாகரன்**
**முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் தமிழ்**
**துணுக்காய் வலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகி திருமதி ஞானசோதி பத்மநாதன் அவர்களின் ஞான ஒளி... சுவடு

பண்பாடு என்பது மண்ணின் பாடல் ஒவ்வொரு மண்ணுக்கும் அம் மண்ணில் வாழும் மக்களுக்கும் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் வெவ்வேறான பண்பாடு உண்டு அந்த வகையில் தமிழ்த்தூது என அழைக்கப்படும் தனிநாயகம் அடிகளார் பிறந்த தனித்துவமான பண்பாடு நிறைந்த நெடுந்தீவு மண்ணில் 02.10.1960 இல் முருகப்பர் பத்தினிப்பிள்ளை தம்பதியர்களுக்கு கடைசி மகளாக ஞானசோதி பிறந்தார்.

சிறுவயதிலேயே கல்வி கற்பதில் ஆர்வமும் சுறுசுறுப்பு மிக்கவராகவும் காணப்பட்டார். இவர் தனது ஆரம்ப இடைநிலைக்கல்வியினை யாழ்/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தயாலயத்திலும் க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் ஆகியவற்றை மு/ஒட்டுசுட்டான் உயர்தரவித்தியாலயத்திலும் கற்று கல்வித் தகைமையைப் பெற்றார்.

1983ஆம் ஆண்டு கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் தொண்டர் ஆசிரியராகவும் கடமையாற்றினார். அக் காலப்பகுதியில் அதிபர் இரா.சின்னத்தம்பி அவர்களின் வழிகாட்டலிலும் அவரின் பின் அதிபர் திரு.நா.சோதிநாதன் அவர்களின் நல்வழிகாட்டலிலும் 1988 யூலை வரையில் ஆரம்பக்கல்வியுடன் தரம் 9,10,11 ஆகிய வகுப்புக்களுக்கு சமயம், கணிதம் ஆகிய பாடங்களையும் கற்பித்தார்.

1987இல் நடைபெற்ற ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப்பரீட்சையில் பரீட்சை எழுதிய தொண்டர் ஆசிரியர் செல்வி முருகப்பர் ஞானசோதி அவர்கள் அப்போட்டிப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு 06.08.1988 இல் கிளி/கலவெட்டித்திடல் நாகேஸ்வராவித்தியாலயத்தில் நிரந்தர ஆசிரியராக நியமனம் பெற்றார். அப்பொழுது அவ்வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு க.வைரமுத்து அவர்களின் வழிகாட்டலின் கீழ் கற்பித்தலை ஒரு நல்ல அனுபவமாகக் கொண்டு மகிழ்வுடன் பணியாற்றினார்.

1990 - 1991 வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் சிறந்த பயிலுநராகக் கற்று கற்பித்தல் தேர்ச்சிமட்டத்தில் பாண்டித்தியம் அடைந்தார். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பயிற்சிகள் முடிந்தபின்னர். 1992ம் ஆண்டு கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலையில் வகுதித்தலைவராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றினார். 1994இல் கிளி/பாரதி வித்தியாலயத்தில் திரு அ.கனகரட்ணம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் இடமாற்றம் பெற்றுச்சென்று எட்டு(08) ஆண்டுகள் பிரதி அதிபராகக் கடமையாற்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலப்பகுதியிலேயே செல்வி முருகப்பர் ஞானசோதி ஆசிரியர் தேன்குயில்கள் இசைபாட தென்றல் வந்து வாழ்த்திசைக்க வானவர்கள் மலர்தூவ மணவாழ்க்கையினுள் காலடி எடுத்து வைத்து திருமதி ஞானசோதி பத்மநாதனானார் இல்லறத்தை நல்லறமாகவும் இனிய கற்பித்தலை நல்ல கற்பித்தலாகவும் மேற்கொண்ட ஞானசோதி ஆசிரியர் ஐந்து குழந்தைகளுக்கு தாயுமானார் முன்னர் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை தமிழ், கணிதம், ஆகிய பாடத்திட்டத்தில் மட்டும் நடைபெறுவதுண்டு அவ்வாறு தமிழ், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பித்து முதன் முறையாக இரு மாணவர்களைச் சித்தியடையச் செய்த பெருமை திருமதி ஞானசோதி பத்மநாதன் ஆசிரியருக்கே உரித்தாகும்.

இத்தகைய ஆற்றலுள்ள ஆசிரியை 01.06.2001 இல் தனது கணவரின் தொழில் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மு/விநாயகபுரம் அ.த.க பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று விருப்புடனே சென்றார். அங்கு ஆசிரியராக கடமையாற்றிய காலப்பகுதியிலேயே ஆசிரிய ஆலோசகராகத் தெரிவு செய்யப்பட்டு துணுக்காய் வலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர். திரு.மா.தேவேந்திரன் அவர்களின் வழிகாட்டலில் 2002 - 2010 வரை கடமையாற்றினார்.

தொடர்ந்தும் கல்விப்பணிப்பாளர் திரு.சி.மேகநாதன் அவர்களின் அறிவுரையின்படி போட்டிப்பரீட்சையிலும், நேர்முகத்தேர்விலும் தோற்றி முதலிடம் பெற்று உதவிக் கல்விப்பணிப்பாளராகினார்.

திருமதி ஞானசோதி பத்மநாதன் அவர்கள் தனது குடும்பச் சுமையுடனும் உதவிக்கல்விப்பணிப்பாளர்க்குரிய கடமைகளையும் சரிவரச்செய்து 64 பாடசாலைகளையும் தரிசிப்பு செய்து அறிக்கை சமர்ப்பிப்பார். 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மீண்டும் கிளிநொச்சி மாவட்டம் வந்தார் கிளி/பாரதிபுரம் அன்னை சாரதாவித்தியாலயத்தில் இரண்டு தவணைகள் ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் 2015 மூன்றாம் தவணையில் இருந்து கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்பவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று திருமதி கா.சிவகரன் அதிபரின் வழிகாட்டலில் பாடசாலைக்கடமைகளை நிறைவேற்றினார்.

தொடர்ந்தும் 2020 இல் கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு அதிபராக கடமையேற்ற திரு.சி.கேதீஸ்வரன் அவர்களின் வழிகாட்டலும் அவரின் பண்பான பேச்சும் பொறுப்புக்களை பகிர்ந்தளிக்கும் பண்புகளையும் நல் அனுபவங்களாகப் பெற்ற திருமதி ஞானசோதி பத்மநாதன் அவர்கள் வகுதித்தலைவராகவும் பிரதி அதிபராகவும் பணியாற்றி இன்று பலருடைய நல்வாழ்த்துக் களுடன் மணிவிழாக் காணுகின்றார்.

**வாழ்க வளமுடன்**

**மலர்க்குழு**

குறிப்பு : மணிவிழா நாயகியிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவலின் படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வும் பணியும்

| | |
|---|---|
| பெயர் | : திருமதி ஞான சோதி பத்மநாதன் |
| தந்தை | : முருகப்பர் |
| தாய் | : பத்தினிப்பிள்ளை |
| பிறந்த இடம் | : நெடுந்தீவு யாழ்ப்பாணம் |
| பிறந்த திகதி | : 02.10.1960 |
| கணவர் | : பத்மநாதன் |

**பிள்ளைகள்**

ப.விஜிந்தன்
மொறட்டுவ பல்கலைக்கழக மாணவன்
ப.மோஜிந்தன்
யாழ்பல்கலைக்கழக மாணவன்
ப.பகிந்தன்
விஞ்ஞானப்பிரிவு
ப.சுகுணதாஸ்
விஞ்ஞானப்பிரிவு
ப. வேணுஜா
கலைப்பிரிவு மாணவி

நிரந்தர முகவரி : 249, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.

ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி : யாழ்/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்

க.பொ.த சா/த, க.பொ.த உ/த : மு/ஒட்டுசுட்டான் உயர்தர வித்தியாலயம்

முதல் நியமனம் : 06.08.1988

**சேவை விபரம்**

அநு/கெக்கிராவ மத்திய கல்லூரி
6.08.1988 - 26.09.1988

கிளி/கிளிநொச்சி கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம்
27.09.1988 - 31.12.1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
01.01.1990 - 31.12.1991

கிளி/கிளிநொச்சி கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம்
01.01.1992 - 15.02.1992

கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை
16.02.1992 - 13.02.1994

கிளி/பாரதி வித்தியாலயம்
14.02.1994 - 31.05.2001

மு/விநாயகபுரம் அ.த.க.பாடசாலை
01.06.2001 - 26.09.2002

வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
27.09.2002 - 24.10.2014

கிளி/அன்னை சாரதாதேவி வித்தியாலயம்
25.10.2014 - 08.02.2015

கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்
09.02.2015 - 02.10.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞான ஒளி விளக்கு

நெடுந்தீவின் முத்து,
நேர்மை மிக்க ஞானசோதி
ஆரம்பக்கல்வியின் ஆழம் கண்ட
நல்லாசான்
நீடுழி வாழ்கவென
வாயார வாழ்த்துகின்றேன்

சைவப்பிரகாச வித்தியாலயத்தில்
அடிப்படைக் கல்வி பெற்று
தான்தோன்றீஸ்வரம் எதிரில்
ஒட்டுச்சுட்டான் ம.வியில்
ஓ எல், ஏஎல் படித்து,
ஆசானாய், அதிபராய்
ஆரம்பக்கல்வியில் துணுக்காயில்
ஆசிரிய ஆலோசகராக
உதவிக்கல்விப் பணிப்பாளராய்
காலத்திற்கேற்ற பதவியுடன்
பணியாற்றி,

மணிவிழாக்காணும் நாளில்
மக்களின் நலனுக்காய்
ஆசிரியராய், பிரதி அதிபராய்
பணிபுரியும்
அறிவுமிக்க ஒளி விளக்கே!
எந்நாளும் ஒளி வீச
உவகையுடன் வாழ்த்துகிறேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்புடன் கதைபேசி
செயலமர்வை நடத்தும் திறன்
தலைமைக்கு தலைவணங்கி
செயலாற்றும் திறன் உடையாய்
கணப்பொழுதும் ஓயாமல்
கடமை செய்ய வாழ்த்துகின்றோம்

தவப்பயனாய் பெற்றெடுத்த
பிள்ளைகளால் உயர்ந்திடுவீர்
தரணியிலே மேலோங்கி
உள்ளமது மகிழ்ந்திருப்பீர்
இத்தனையும் பெற்றிடவே
இதமாக வாழ்த்துகிறேன்

ஓய்வு நிலைகாலத்திலும்
ஓயாது பணிசெய்து - வாழும்
காலமெல்லாம் களிப்புடனே
வாழ்கவென வாழ்த்துகின்றேன்

**அன்பு ஆசிரியை**
**திருமதி.ஜெயஸ்ரீ உதயகுமார்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமுடன் என்றும் நீங்கள் வாழ்க

புன்னகையும் சுறு சுறுப்பும்
நிறைந்தீர் அம்மா
பூரிப்பாய் பல பாடசாலைகளில்
;சேவைகள் செய்தீர் அம்மா
தன்னகத்தே பற்றோடு
வாழ்ந்தீர் அம்மா
தரணியிலே கல்விக்காய்
உழைத்தீர் அம்மா

முல்லையிலே துணுக்காயில்
சேவைசெய்து
முத்தான பாராட்டுக்கள்
பலவும் பெற்றீர் அம்மா
கல்வி என்னும் பயிருக்கு
களங்க மேதும் இன்றி
கவனமாக சேவை செய்து
உயர்ந்தீர் அம்மா

எங்களது கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலயத்திலும்
இனிதான சேவைகள் பலவும் செய்து
உள்ளங்கள் பல கோடி வாழ்த்த வாழ்த்த
உயர்வான ஆசிகள் பலரும் நல்க
எண்ணங்கள் முழுவதும் இனிமை தேங்க
இனிதான "மணி விழா" காண்கின்றீர்கள்
வண்ணமாய் வாழ்த்துக்கள் பலவும் தந்தோம்
வளமுடன் என்றும் நீங்கள் வாழ்க! வாழ்க

**ஆக்கம்**
**திருமதி ய.சசிபாபு**
**கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2020 இல் தமிழ்ச் சங்கத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பெற்ற போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க இம்மண் செழிக்க

நல்லாசான் எனக் கல்விப்புலத்தில் இணைந்து
நாளும் வளர் அறிவு திறன் மனப்பாங்காலே
பல்பதவி பெற்றுயர்ந்த பத்மநாதன் சோதியம்மா
இவ்வுலகோர் உவந்தினிது வாழ ஒப்பரிய சேவை புரிந்து
கற்றோரும் மற்றோரும் களிப்புக்கொள்ள
துணிவும் தொலை நோக்கும் தொடர தனையுயர்த்தி
பணியின் பெருமைக்குள் பார்களிக்கும் வகை தெரிந்து
வாழ்க நெடுநாள் இம் மண் செழிக்க மனம் களிக்க
சூழ்க பொழில் சுகங்கள் சுடர்க கருணை மனம் வாழ்க
இவ்வையகமே வாழ்த்தி நிற்க வாழியவே

**திருமதி சி.கனகசுந்தரம்**
**ஆசிரியை**
**கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழாவின் மகுட நாயகிக்கு...

அறுபதாம் அகவை தனில்
அடியெடுத்து வைக்கும் அன்பு ஆசிரியர்
அன்பு மொழி பேசி அனைவரையும்
அகம் மகிழ வைக்கும் ஆசிரியர்
வாழ்க......... வாழ்க....... வாழ்க.......

ஆசையுடன் பள்ளி வந்து
ஆர்வத்துடன் பணி புரிந்து
அதிபர்க்கும் உதவி செய்து
ஆசிரியர்க்கெல்லாம் வழிகாட்டிய
அன்புக்கரசியே வாழ்க...... வளமுடன்

இல்லத்தை சிறக்க வைக்கும் இல்லத்தரசி
இன் முகத்துடன் அரவணைக்கும் அன்பு அம்மா
ஆசிரியரை அன்போடு வழிநடத்தும் நல்லாசிரியர்
எல்லோருடனும் நன்றாகப் பழகும் நல்ல உள்ளம்
வாழ்க வளமுடன் எந்நாளும்

வார்த்தையால் மட்டும் வர்ணித்திட முடியாது
சோதி ஆசிரியர் சேவையின் மகத்துவம்
வாழ்க்கையிலும் உம் பெயரைப் போல்
வாழ்ந்திடுவீர் நாளும் சோதியாய்
இனியவளே இந்நாளும் எந்நாளும்
வாழ்க வளமுடன்........

**வாழ்த்தும்**
**திருமதி சுஜாதா ரகுநாதன் ஆசிரியர்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடும்பத்தினருடன் மணிவிழா நாயகி



உதவிக் கல்விப் பணிப்பாளரால்
பாராட்டப்பெற்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாலத்தின் சோதியே

அறுபதினில் ஓய்வெடுக்கும்
அற்புதமே சோதியம்மா
அன்பிற்கு அம்மாவாய்
அறிவுக்கு ஆசானாய்
ஆறுதலுக்கு உற்ற நண்பனாய்
பொறுமையின் பொக்கிசமாய்
பெரியோர் மனங்களில் இருப்பிடமாய்
வேறுபாடின்றி வேரூன்றிப் பழகி
பண்பிற்கு பரிசு பெறும்
பத்மநாதன் சோதியம்மா - நீங்கள்
பதவிகள் பல பெற்று
பாரினில் உயர்த்திட்ட
பாக்கியம் அம்மா - நீங்கள்
ஞாலம் போற்றும்
நாயகியாய் உயிர்
உள்ளவரை வாழ்ந்து
பிறந்திட வாழ்த்துகின்றேன்

**ஆசிரியர்**
**திருமதி பபிர்தா கஜேந்திரன்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாண்புடன் மணிவிழாக் காணும் திருமதி ஞானசோதி பத்மநாதன் அம்மணியிடம் உள்ள பண்புகளோ பல, அவற்றுள் நாம் கற்றுக்கொண்டதோ சில

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டுதனில் எமது வித்தியாலயத்திற்கு தனது ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர். என்ற பதவிகளில் விலகி ஒரு ஆசியராாக வந்த வேளை எமது பாடசாலையில் தரம் இரண்டு வகுப்பில் நுழைந்து கொண்டார். பெரிய பதவியில் இருந்து வந்தவர் எவ்வாறு வகுப்பறையில் கற்பிக்கப்போகிறார். என வியந்து நாம் நின்ற வேளை அவர் பிள்ளைகளோடு பிள்ளைகளாக மாறி விளை யாட்டாக கற்பித்த பண்பு எம்மை வியக்க வைத்தது. பின் அவர் வகுதித்தலைவராகி ஆசிரியர்களுடன் உள்ளக மேற்பார்வையின் போது தோழமையுடன் வழிகாட்டி பணியினை தொடரும் பண்பே தனியாகும்.

கற்பித்தலோடு நிற்காது ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகள் அனைத்திலும் அவர் பங்கெடுக்கும் பண்பு சிறந்தது. அந்தவகையில் சைவ பரிபாலன சபை பரீட்சை களையும், தமிழ்சங்கத்தின் திருக்குறள் போட்டிகளையும் முன்னின்று நடாத்தி மாணவர்களை போட்டிகளுக்கும், பரீட்சைகளுக்கும், பரிசில் பெறுவதற்கும் தனது குடும்ப வேலைகளை புறந்தள்ளி அழைத்துச்செல்லும் பண்பு பெரிது. அதன் பயனால் அண்மையில் தமிழ்சங்கத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும், எல்லோரும் அறிந்ததே.

நூல்கள் வெளியீடுகள் என்றால் தானே பொறுப்பேற்று இறுதிநாள் வரை சீறலும், சினப்பும் இன்றி சக ஆசிரியர்களின் கருத்துக்களை உள்வாங்கி அச்சிட்டு வெளியிடும் பண்பு நாம் பின்பற்ற வேண்டியதே அம்மணி தனது குடும்பத்தில் கணவன் நோயுற்ற வேளையில் அவரது கடமைகளை முடித்து பாடசாலைக்கும் விடுப்புக்கோராது சமூகமளிக்கும் பண்புள்ளவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றில் நின்ற துணை"** என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைய ஒரு துறவியை விட இல்வாழ்க்கையில் உறவினர், நண்பர்கள், அயலவர்கள் என எல்லோரையும் திருப்திப்படுத்தி உறவு கொண்டாடி மகிழும் பண்பு, பிரமிக்கத்தக்கது.

அத்துடன் அவர் பெற்ற பிள்ளைகளை நற்பண்புள்ளவர்களாகவும், சமூகம் போற்றும் சிறந்த பிரசைகளாகவும், கல்வியில் சிறந்தவர்களாகவும் வளர்த்து பெற்றோரிற்குரிய கடமையிலும் தன்னை உயர்த்திக் கொண்டார்.

இவரின் பண்புகள் நாமும் பின்பற்றி வாழ்வதற்கு வழிகாட்டுகின்றது. மேலும் அவர் சீரும், சிறப்பும் பெற்று நீண்ட ஆயுள், நிறைந்த ஆரோக்கியம், நீங்காத செல்வத்தோடு வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

**ஆசிரியர்**
**திருமதி.வி.சிவஞானம்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் தொடரும் நிழல்கள்

அன்பு என்ற சொல்லிற்கும்
அரவணைப்பு என்ற சொல்லிற்கும்
அர்த்தம் எதுவெனத் தேடித்தந்த
பெருமைத் தாயே!

உங்கள் பண்பினை
உலகிற்கு உணர்த்திட
ஒரு சிறு துளி வரிகளை
கவி வரியாய்த் தருகின்றேன்

"அ" என்ற எழுத்தை எனக்கு
அறிமுகம் செய்தவர் நீங்கள்
அன்புடனும் பரிவுடனும்
எனதருகில் இருந்து
என் இரு விழிகளில் வழியும்
கண்ணீரைத் துடைத்தவர் - நீங்கள்

என் ஒவ்வொரு உயர்விற்கும்
உறுதுணையாய் இருந்தவர் நீங்கள்
நான் தவறு செய்யும் வேளையிலும்

தடுமாறி நின்ற பொழுதினிலும்
உங்கள் தங்கக் கரங்கள் எனைத்
தட்டிக் கொடுக்கும் போது - நான்
உச்சி குளிர்ந்து போவேன் - உங்கள்
உள்ளத்தை எண்ணி

உங்கள் அன்பான பேச்சும்
அனுபவமான அறிவும் - என்னைப்
பல தடவை மெய்சிலிர்க்க
வைத்ததுண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிற்கே இலக்கணமாய்
பெற்றீர்கள் உங்கள் புதல்வர்களை
அறிவிற்கும் சவாலாய் வளர்த்தீர்கள்
அக் குழந்தைகளை

நித்தம் உங்கள் பெருமை யாவும் - எனை
நிழலாய்த் தொடர்ந்து வரும்
பள்ளி வரும் போதெல்லாம்
பக்குவமான உங்கள் செயலினையும்
பம்பரமாய்ச் சுழலும் உங்கள் பணியினையும்
பார்த்து வளர்ந்தவள் நான்

இன்று நீங்கள் மணிவிழா காணும் வேளையிலே
மகிழ்வோடு வாழ்த்துகிறேன்
மனசாரப் போற்றுகிறேன்
உங்கள் பணி தொடர வேண்டும்
உங்கள் அன்பு மிளிர வேண்டும்
உங்கள் கனவு நனவாக வேண்டும்

**திருமதி.கி.அரியதாசன்**
**ஆசிரியர்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு வாழ்த்து
### திருமதி ஞானசோதி பத்மநாதன்
### (வகுதித்தலைவர் / பிரதி அதியர்)

சிந்தனையும், செயலும்
சிறப்பான சேவைகளும்
பள்ளியிலே ஆசிரியராக,
பல பாடசாலைகளில்
வகுதித் தலைவராக,
வல்லமைகள் பல காட்டிய
ஞான சோதியம்மா
வரலாறு போற்றட்டும்
வாழ்க! வாழ்க!

முல்லையிலே......
துணுக்காய் வலயத்திலே
முயற்சியுள்ள
ஆசிரிய ஆலோசகராக
நல்லவைகள் பல செய்தீர்
வாழி... வாழி

உதவிக் கல்விப்பணிப்பாளராக (ஆ.க)
உயர்ச்சி பெற்று
உன்னதமாய் பணிசெய்த
செய்தி அறிந்தோம்
காலங்கள் உருண்டோடி
மணி விழாவை
கண் முன்னே தந்ததம்மா
வாழி...... வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது வித்தியாலயத்திலும்
பகுதித் தலைவராக, பிரதி அதிபராக
எத்தனையோ கருமங்கள்
செய்து முடித்தீர்கள்
ஞாலமே போற்றட்டும்
தங்கள் சேவைகளை
நாம் ஒன்றாய் வாழ்த்துகின்றோம்
வாழ்க! வாழ்க!

**ஆக்கம்:**
**பூநகர் கவிப்பிரியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம் நிறைந்த நன்றிகள்

எமது பாடசாலையில் பகுதித்தலைவராகவும் பிரதி அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி ஞானசோதி பத்மநாதன் அவர்களின் மணிவிழா நிகழ்வுக்காக

ஆசியுரை நல்கியோர்
வாழ்த்துரைகள் வழங்கியோர்
பட்டறிவு பகிர்ந்தோர்
மலருக்கு ஆக்கங்கள் அளித்தோர்
அச்சழகு செய்தோர்
விழாவில் கலந்து சிறப்பித்தோர்

அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மணிவிழாக்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவா பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org